2013 பிப்ரவரி 5]

தவிர்த்து இந்தத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்தி மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை எளிமையாகவும், உடனடியாகவும் பெற வேண்டுமென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மின்னணு மூலமாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கப்பட்டு, பயனாளிகளுக்கு நேரடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு, உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாக, மக்களாட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தியும், உதவித் தொகை உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ள தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

வாழை ஆராய்ச்சி நிலையம்

***21022—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் செவ்வாழை, நேந்திரன் மற்றும் மட்டி ஆகிய வாழை இரகங்களின் ஆராய்ச்சித் திடல்கள் அமைக்கப்பட்டு, ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழையில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்காக வேளாண் அறிவியல் மையத்தின்மூலம் விவசாயிகளின் வயல்வெளிகளில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழைக்கென தனியாக ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு தொடங்கியுள்ள முதல் கூட்டத்தொடர் என்பதால், அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்படும் நேந்திரன் பழம், மட்டிப் பழம் மற்றும் சிவப்புப் பழம் இவை வேறு எங்கும் விளைவிக்கமுடியாத வகைப் பழங்களாகும். எனவே, இதற்கான சிறப்பு ஆராய்ச்சி மையம் அவசியம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழைப் பயிர்களில் முடிக்கொத்து நோய் அதிகமாக காணப்படுகிறது. வாழை விவசாய விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இதனைத் தடுக்க அரசு சிறப்புத் திட்டங்கள் கொண்டுவர ஆவன செய்யுமா? தன்னை மனித குலத்திற்குத் தந்துதவும் வாழை தமிழகத்தில் அதிகமாக விளைவதால், அதன் வியாபார அபிவிருத்திக்காக ஒரு வாழை வாரியம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

தற்போது வறட்சி காரணமாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழை விவசாயிகளும், தென்னை விவசாயிகளும்

மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்கீழ் திருப்பதிசாரத்திலே ஒரு வேளாண் ஆராய்ச்சி நிலையமும், பேச்சிப்பாறையில் ஒரு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் மற்றும் தோவாளையில் ஒரு மலர் ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி நிலையங்கள்மூலமாக வாழைப் பயிரிலே ஏற்படும் பூச்சி மற்றும் நோய் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விஞ்ஞானிகள்மூலமாக தீர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வாழைப் பயிருக்கென புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்காக வயல்வெளிகளில் இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாகவும் தொடர்ந்து ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழைப் பயிருக்கென தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்கவேண்டியதில்லை என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி அதிகமாக இருப்பதால் வாழை, தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அரசைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.